விமான எரிபொருள் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ரூ.10,000 கோடி வட்டியில்லா முன்பணம்

புது தில்லி, ஜூன் 3: மேற்காசிய போர் நிலவரம் காரணமாக விமான எரிபொருள் தொடர்ந்து உயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ரூ. 10,000 கோடி விமான எரிபொருள் நிலைப்படுத்துதல் நிதி திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் அளித்தது.

தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ், உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான சேவைகளை வழங்கும் இந்திய விமான நிறுவனங்களுக்கு நிலைப்படுத்தப்பட்ட விலையில் விமான எரிபொருள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், அரசுக்குச் சொந்தமான எண்ணெய் சந்தை நிறுவனங்களுக்கு ரூ. 10,000 கோடி வரை வட்டியில்லா முன்பணம் வழங்கப்படும்.

சர்வதேச சந்தையில் விமான எரிபொருள் விலை கடந்த மார்ச் மாதம் லிட்டர் 60.50-ஆக இருந்த நிலையில், மேற்காசிய போர் காரணமாக கடந்த மே மாதம் அதன் விலை லிட்டர் ரூ.142-ஆக உயர்ந்தது. இது, விமான நிறுவனங்கள் மீது பெரும் நிதிச் சுமையை ஏற்படுத்தியதால், விமானப் பயணக் கட்டணங்களை விமான நிறுவனங்கள் பன்மடங்காக உயர்த்தின. இந்தச் சூழலில், விமான எரிபொருள் விலை நிலைப்படுத்துவதற்கான நிதி உதவித் திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில், 'விமானங்களை இயக்குவதற்கான மொத்த செலவில், எரிபொருள் செலவு மட்டும் 40 சதவீத அளவுக்கு பங்கு வகிக்கிறது. மேற்காசிய போர் காரணமாக இந்த விகிதம் மேலும் அதிகரித்துள்ளது. இந்தச் சூழலில், மத்திய அரசு அறிவித்துள்ள நிதி உதவித் திட்டம், இந்திய விமானங்களுக்கான நிலையான விலையில் எரிபொருள் கிடைக்கும் என்பதோடு, விமான இயக்கத்தில் ஏற்படும் இடையூறுகளைத் தடுக்க உதவும். மேலும், விமான பயணக் கட்டணங்கள் பன்மடங்கு உயர்வால் பயணிகளுக்கு ஏற்படும் பாதிப்பும் குறையும்' என்றார்.



மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து தில்லியில் செய்தியாளர்களுக்கு புதன்கிழமை விளக்கிய மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்.

தெலங்கானாவில் ரூ. 7,597 கோடியில் நெடுஞ்சாலைத் திட்டம்: தெலங்கானா மாநிலத்தில் ரூ. 7,597.16 கோடி செலவில் சுமார் 190.76 கி.மீ. தொலைவு தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இத் திட்டத்தின் கீழ் தெலங்கானாவில் என்.ஹெச்.63-இன் அர்மூர்- ஜக்டியால் - மஞ்சேரியேல் நெடுஞ்சாலைப் பிரிவும், என்.ஹெச்.563-இன் ஜக்டியல்-கரீம்நகர் நெடுஞ்சாலைப் பிரிவும் நான்கு வழித்தட தரத்துக்கு அகலப்படுத்தப்பட உள்ளன.

பிகாரில் ரூ. 3,936 கோடியில் நெடுஞ்சாலைத் திட்டம்: பிகார் மாநிலத்தில் ரூ. 3,936.05 கோடி செலவில் தேசிய நெடுஞ்சாலைகளை நான்குவழித் தடங்களாக மேம்படுத்தும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இத் திட்டத்தின் கீழ், மாநிலத்தில் என்.ஹெச்.31-இன் ககாரியா-புர்னியே பிரிவும், என்.ஹெச்.231 தேசிய நெடுஞ்சாலையும் நான்குவழித் தடங்களாக மேம்படுத்தப்பட உள்ளன.

ஒடிஸாவில் புதிய கடலோர தேசிய நெடுஞ்சாலை: ஒடிஸா மாநிலத்தில் ராமேஸ்வர் நகரம் முதல் பாரதீப் வரை ரூ. 8,300.79 கோடி செலவில் புதிய கடலோர தேசிய நெடுஞ்சாலை அமைக்கும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இரண்டு திட்டங்களாகச் செயல்படுத்தப்படும் இந்தப் புதிய கடலோர தேசிய நெடுஞ்சாலை குர்தா, புரி, கெந்தர்படா, ஜகத்சிங்பூர் மாவட்டங்கள் வழியாக சுமார் 160.18 கி.மீ. தொலைவுக்கு அமைய உள்ளது.

மத்திய பிரதேசத்தில் ரூ. 4,415.60 கோடியில் சாலைத் திட்டம்: மத்திய பிரதேச மாநிலத்தில் ரூ. 4,415.60 கோடி செலவில் இரு சாலைத் திட்டங்களை மேற்கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இத் திட்டத்தின் கீழ், மாநிலத்தில்என்.ஹெச்.347பி-இன்ஹிவர்கேடி-ரோஷ்னி-ஆஷாபூர்-ருதி பிரிவு மற்றும் தேஷ்கோன் - ஜுல்வானியா பிரிவு நெடுஞ்சாலைகள் நான்குவழித் தடங்களாக மேம்படுத்தப்பட உள்ளன.

தில்லியில் பழைய வாகனங்கள் மாற்று திட்டத்துக்கு ஒப்புதல்: தலைநகர் தில்லியில் ஏற்பட்டு வரும் கடுமையான காற்று மாசு பாதிப்பை சற்று குறைக்கும் நோக்கில், தில்லி தேசிய தலைநகர் பிராந்தியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்கும் பழைய பிஎஸ்-4 என்ஜின்களில் இயங்கும் லாரிகள் மற்றும் பேருந்துகள் கட்டாயம் பிஎஸ்-6 என்ஜின்களுக்கு மாற்றுதல் அல்லது மின்சார வாகனங்களாக மாற்றும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இத் திட்டத்தின் கீழ், பழைய வாகனங்களை மாற்றும் உரிமையாளர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு 5 சதவீத வட்டிச் சலுகையில் கடன்கள் மற்றும் வாகன வகையின் அடிப்படையில் ரூ. 4,800 வரையிலான மாதாந்திர எரிபொருள் கூப்பன்கள் வழங்கப்படும். அதுபோல, மின்சார வாகனமாக மாற்றுபவர்களுக்கு பெருமளவில் மானியம் வழங்கப்படும். இந்தத் திட்டத்தின்கீழ், தில்லி, ஹரியாணா, ராஜஸ்தான், உத்தர பிரதேம் உள்ளிட்ட தேசிய தலைநகர பிராந்தியத்துக்கு உட்பட்ட 2.07 லட்சம் வாகன உரிமையாளர்கள் பயனடைவர். இத் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசுக்கு ரூ. 5,041 கோடியும், மாநில அரசுகளுக்கு ரூ. 1,601 கோடி அளவிலும் செலவாகும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வாக்குப் பதிவு அதிகரிப்பு மக்களின் நம்பிக்கையின் அடையாளம்

தலைமைத் தேர்தல் ஆணையர்

புது தில்லி, ஜூன் 3: அண்மையில் நடைபெற்ற 5 மாநிலச் சட்டப் பேரவைத் தேர்தலில் வாக்குப் பதிவு அதிகரித்தது, நமது தேர்தல் நடைமுறை மீதான மக்களின் நம்பிக்கையின் அடையாளமாக உள்ளது தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தெரிவித்தார்.

தேர்தல் முறையில் ஊடகங்களின் சிறப்பான பங்களிப்பு தொடர்பான சர்வதேச மாநாடு தில்லியில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் பங்கேற்ற ஞானேஷ் குமார் பேசியதாவது:

தேர்தல் களத்தில் வாக்குப் பதிவின்போது நேரடியாக களத்தில் பணியாற்றுபவர்கள் தொடங்கி அனைவருக்கும் தேர்தல் ஆணையம் முறையாகவும், சிறப்பாகவும் பயிற்சியளித்து வருகிறது. வாக்குச்சாவடி ஊழியர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் என அனைவருக்கும் உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன.

இதனால்தான் இந்தியாவில் 100 கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்களை தேர்தல் ஆணையம் எளிதாக கையாள முடிகிறது.

அண்மையில் தமிழ்நாடு, மேற்கு வங்கம், அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரியில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற்றது. இதில் வாக்குப் பதிவு அதிகரித்தது.

முக்கியமாக தமிழ்நாடு, மேற்கு வங்கம், அஸ்ஸாம், புதுச்சேரியில் 1951-ஆம் ஆண்டுக்குப் பிறகு மிக அதிக எண்ணிக்கை மற்றும் சதவீதத்தில் வாக்குகள் பதிவாகின. இது நமது தேர்தல் நடைமுறை மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை வெளிக்காட்டுவதாக உள்ளது.

தேர்தல் ஆணையம் நடத்தும் இந்த இரு நாள்கள் மாநாட்டில், தேர்தல் நடைமுறைகள், அதை நடத்துவது தொடர்பான சர்வதேச பார்வை எவ்வாறு உள்ளது, இந்தியாவில் தேர்தல் முறையை எவ்வாறு மேலும் மேம்படுத்துவது என்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

குஜராத்: சட்டவிரோதமாக தங்கியிருந்த 362 வங்கதேசத்தவர் கைது

அகமதாபாத், ஜூன் 3: குஜராத்தில் காவல் துறையினர் மேற்கொண்ட அதிரடி தேடுதல் வேட்டையில், சட்டவிரோதமாக இந்தியாவில் தங்கியிருந்த 362 வங்கதேசத்தவர் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக மாநில காவல் துறை குற்றப் பிரிவு இணை ஆணையர் சரத் சிங்கால், அகமதாபாத் காவல் ஆணையர் ஜி.எஸ். மாலிக் ஆகியோர் அகமதாபாதில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

குஜராத்தில் சட்டவிரோதமாக ஏராளமான வங்கதேசத்தவர் ஊடுருவியுள்ளது தெரியவந்ததையடுத்து, துணை முதல்வர் ஹர்ஷ் சங்கவி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதன்படி 'ஆபரேஷன் டெல்டா ஹண்ட்' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

30 காவல் துறைக் குழுக்கள் அமைக்கப்பட்டு பல்வேறு பகுதிகளில் சட்டவிரோதமாக தங்கியிருப்போர் குறித்து விசாரணை நடத்தப்பட்டது. இதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 780-க்கும் மேற்பட்ட சந்தேகத்துக்குரிய நபர்கள் கண்டறியப்பட்டனர்.

குஜராத்தில் கைது செய்யப்பட்ட வங்கதேசத்தைச் சேர்ந்தவர்களை விசாரணைக்காக அழைத்துச் செல்லும் போலீஸார்.

இவர்களில் 362 பேர் வங்கதேசத்தவர் என்பதும், சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் ஊடுருவி குஜராத்தில் தங்கியிருந்ததும் உறுதி செய்யப்பட்டது. இவர்களில் பலர் மோசடியாக ஆதார் அட்டை உள்ளிட்ட இந்திய அடையாள ஆவணங்களைப் பெற்றுள்ளனர்.

இது தொடர்பாகவும், அவர்கள் இங்கு சம்பாதிக்கும் பணத்தை வங்கதேசத்துக்கு எவ்வாறு அனுப்பி வைத்தார்கள் என்பது குறித்தும் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் தொடர்பாகவும் விசாரிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு குஜராத்தில் இருந்து 465 வங்கதேசத்தவர் அவர்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர்.

அதேபோல இப்போது பிடிபட்டுள்ளவர்களும் அனுப்பப்படுவர் என்று தெரிவித்தனர்.

ஜனநாயகத்தை வலுப்படுத்த தணிக்கை முக்கியமானது

குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்

புது தில்லி, ஜூன் 3: 'ஜனநாயகத்தை வலுப்படுத்தவும், பொது நிதி நியாயமான முறையில் பயன்படுத்தப்பட்டது என்ற உறுதிப்பாட்டை குடிமக்களுக்கு வழங்கவும் தணிக்கை முக்கியப் பங்கு வகிக்கிறது' என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தில்லியில் புதன்கிழமை நடைபெற்ற முன்னாள் இந்திய தலைமை தணிக்கையாளர் (சிஏஜி) வினோத் ராயின் நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்ற குடியரசு துணைத் தலைவர் இக் கருத்தைத் தெரிவித்தார். அவர் மேலும் பேசியதாவது:

ஜனநாயகத்தை வலுப்படுத்தவும், பொது நிதி நியாயமான முறையில் சட்டத்துக்கு உட்பட்டு நல்ல விஷயங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது என்ற உறுதிப்பாட்டை குடிமக்களுக்கு வழங்கவும் தணிக்கை முக்கியப் பங்கு வகிக்கிறது.

செயல் திட்டங்களை மேம்படுத்தவும், குறைகளை நிவர்த்தி செய்யவும், திட்டத்தின் பலனை விரிவுபடுத்தவும் தணிக்கை அரசுக்கு உதவுகிறது. முக்கியமாக, அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையேயான நம்பிக்கையை தணிக்கை வலுப்படுத்துகிறது.

இத்தகைய பொறுப்புமிக்க தணிக்கை நடைமுறைக்கு தொடர்ச்சியான மேம்படுத்தலும், தணிக்கை வளங்கள் மீதான முதலீடும் அவசியம். அதாவது, பயிற்சி, தொழில்நுட்ப மேம்பாடு, செயல்திறன் மதிப்பீடு, தரவுகள் பகுப்பாய்வு, துறைசார் நிபுணத்துவம் ஆகியவை அவசியம்.

அதுபோல, தலைமை தணிக்கையாளர் முன்மாதிரியாகத் திகழ்ந்து, நெறிமுறைகளையும், நேர்மையையும் தொடர்ந்து வளர்க்க வேண்டும் என்றார்.

வங்கி ஆஃப் பரோடா
Bank of Baroda

மண்டல அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB), சென்னை கிராமப்புற பிராந்தியம், எண்.123, துகார் டவர்ஸ், R.L.சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
போன்:044- 2888 5428 E-mail:sarcmt@bankofbaroda.com

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு
"APPENDIX- IV-A [See proviso to Rule 6 (2) & 8 (6)]

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002 விதி 6(2) & 8 (6) சேர்த்து வாசிக்கவும். இதன் படி அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை மின்ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் கடன் கொடுத்த வங்கியானது கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை பேங்க் ஆப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதினத்தில் எடுத்துக் கொண்டுள்ளதை அடுத்து கீழே குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளபடியே" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / கடனீட்டு சொத்துக்கள் / நிலுவை தொகை/ குறைந்த பட்ச விலை / மின் ஏலதேதி மற்றும் நேரம், முன்வைப்பு தொகை மற்றும் ஏல உயர்வு தொகை போன்றவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள.

வ.எண். 1 : கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி : கடன்தாரர்:
திரு. ஞானசேகரன் சுப்பு, 1 எண்.3, மனை எண்.37 மற்றும் 38, கிரின் கார்டன், திருவள்ளுவர் தெரு, ஓம் சக்தி நகர், கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை - 600 053. **மற்றும் மேலும் : திரு. ஞானசேகரன் சுப்பு,** எண்.FOC, 4வது தளம், 5வது பிளாக், ஜெயின்ஸ் நக்ஷத்ரா அப்பார்ட்மெண்ட், யூனியன் சாலை, சின்ன ஒரகடம், சென்னை.
மொத்த நிலுவை தொகை: 31.05.2026 அன்று வரை ரூ. 28,09,102.91 மேலும் **01.06.2026** முதல் பின்வட்டி மற்றும் பிற சட்ட செலவுகள் உட்பட.
தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய விரிவான குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துகள் : சுவாதீன நிலை : அசல் சுவாதீனம் : காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தாலுக்கா மற்றும் நகரம், எண்.54, செவிலிமேடு கிராமத்தில் சர்வே எண்.61, 156/4, 157/2 மற்றும் 155/1A-ன்படி மொத்தமுள்ள **4.79 ஏக்கர்** பரப்பளவு நிலம், செங்கல்பட்டு மண்டல நகர மற்றும் ஊரக திட்டமிடல் துணை இயக்குநர் அவர்களால் மாற்றியமைக்கப்பட்ட DTCP மனைப்பிரிவு அனுமதி எண்.48/2005-ன்படி JJ நகர் மனைப்பிரிவு என பெயரிடப்பட்டுள்ள மனை பிரிவில் பட்டா எண்.5653-ன்படி சர்வே எண்.61/12 மற்றும் 36-ன்படி மனை எண்.29-ல் மொத்தமுள்ள **1980 சதுர அடி** பரப்பளவு நிலத்தில் **465.50 சதுர அடி** பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் 2வது தளத்தில் **970 சதுர அடியில்** கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு எண்.S2. அதனுடன் பொதுபயன்பாட்டு பகுதிகள் உட்பட மேலும் 1 மூடிய கார் நிறுத்துமிடம் உரிமையுடன் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து உரிமைகள் மற்றும் நலன்களுடன். மேலும் அதனுடன் இணைந்த துணைப்பகுதிகளும். **எல்லைகள்:** வடக்கில்: 30 அடி சாலை, தெற்கில் : சர்வே எண்.62ல் உள்ள நிலம், கிழக்கில் : மனை எண்.30 மற்றும் மேற்கில்: மனை எண்.28. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 33 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 33 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 60 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் - 60 அடி. மொத்தம் - **1980 சதுர அடி.** இந்த சொத்து காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் இணை - II துணைப்பதிவு மாவட்டம் எல்லைக்கு உட்பட்டது.
குறைந்த பட்ச விலை : ரூ. 26,82,000/- | முன் வைப்பு தொகை : ரூ. 2,68,200/- | ஏல உயர்வு தொகை : ரூ. 10,000/-

வ.எண். 2 : கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி : கடன்தாரர்:
திருமதி. சித்ரா.C, எண்.3, மனை எண்.37 மற்றும் 38, கிரின் கார்டன், திருவள்ளுவர் தெரு, ஓம் சக்தி நகர், கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை - 600 053. **மற்றும் மேலும் : திருமதி. சித்ரா.C,** எண்.FOC, 4வது தளம், 5வது பிளாக், ஜெயின்ஸ் நக்ஷத்ரா அப்பார்ட்மெண்ட், யூனியன் சாலை, சின்ன ஒரகடம், சென்னை.
மொத்த நிலுவை தொகை: 31.05.2026 அன்று வரை ரூ.40,82,775.60/- மேலும் **01.06.2026** முதல் பின்வட்டி மற்றும் பிற சட்ட செலவுகள் உட்பட.
தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய விரிவான குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துகள் : சுவாதீன நிலை : அசல் சுவாதீனம் : காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தாலுக்கா மற்றும் நகரம், எண்.54, செவிலிமேடு கிராமத்தில் சர்வே எண்.61, 156/4, 157/2 மற்றும் 155/1A-ன்படி மொத்தமுள்ள **4.79 ஏக்கர்** பரப்பளவு நிலம், செங்கல்பட்டு மண்டல நகர மற்றும் ஊரக திட்டமிடல் துணை இயக்குநர் அவர்களால் மாற்றியமைக்கப்பட்ட DTCP மனைப்பிரிவு அனுமதி எண்.48/2005-ன்படி JJ நகர் மனைப்பிரிவு என பெயரிடப்பட்டுள்ள மனை பிரிவில் பட்டா எண்.5653-ன்படி சர்வே எண்.61/12 மற்றும் 36-ன்படி மனை எண்.29-ல் மொத்தமுள்ள **1980 சதுர அடி** பரப்பளவு நிலத்தில் **524.50 சதுர அடி** பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் 2வது தளத்தில் **1070 சதுர அடியில்** கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு எண்.S1. அதனுடன் பொதுபயன்பாட்டு பகுதிகள் உட்பட மேலும் 1 மூடிய கார் நிறுத்துமிடம் உரிமையுடன் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து உரிமைகள் மற்றும் நலன்களுடன். மேலும் அதனுடன் இணைந்த துணைப்பகுதிகளும். **எல்லைகள்:** வடக்கில்: 30 அடி சாலை, தெற்கில் : சர்வே எண்.62ல் உள்ள நிலம், கிழக்கில் : மனை எண்.30 மற்றும் மேற்கில்: மனை எண்.28. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 33 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 33 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 60 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் - 60 அடி. மொத்தம் - **1980 சதுர அடி.** இந்த சொத்து காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் இணை - II துணைப்பதிவு மாவட்டம் எல்லைக்கு உட்பட்டது.
குறைந்த பட்ச விலை : ரூ. 30,33,000/- | முன் வைப்பு தொகை : ரூ. 3,03,300/- | ஏல உயர்வு தொகை : ரூ. 10,000/-

மின் ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம்	22.06.2026 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்	17.06.2026 அன்று பிற்பகல் 03.00 மணி முதல் 05.00 மணி வரை

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களை https://www.bankofbaroda.in/e-auction.htm மற்றும் ஆன்லைன் போர்ட்டல் https://baanknet.com மேலும் விலைப்புள்ளிதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொலைபேசி எண். 044-28885428 - கைபேசி எண். 8940056367-ல் தொடர்பு கொள்ளவும்.

விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இங்கு ஸ்கேன் செய்யவும்

தேதி : 03.06.2026
இடம் : சென்னை
சுதிர் குமார் பர்ன்வால்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
பேங்க் ஆஃப் பரோடா

மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம் III சென்னை முன்னிலையில்
(சாந்திரி பவன், கூடுதல் கட்டிடம், வேலு தனம், நுங்கம்பாக்கம், சென்னை - 600 034)
O.A. எண்.1193/2025

இந்தியன் வங்கி, வங்கி நிறுவனங்களின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு பெருநிறுவன அமைப்பு நிறுவனங்களின் (கையகப்படுத்துதல் மற்றும் பரிமாற்ற தொழில் நிறுவனம்) சட்டம் V 1970, அதன் பெருநிறுவன அலுவலகம் இருப்பது : 254-260, அவ்வை சண்முகம் சாலை, சென்னை மற்றும் அதன் கிளையில் ஒன்றான அயனாவரம் (IFSC - IDIB000A040), எண்.18, K.V. கோயில் தெரு, அயனாவரம், சென்னை - 600 023.
...விண்ணப்பதாரர்

-எதிரிடை-

(1) M/s. A M எண்டர்பிரைசஸ், பிரதிநிதியாக இதன் பங்குதாரர்கள் (உத்யோக் ஆதார் எண்.TN02D0103598), திரு. A. டேவிட்சன் ஜூனரில் & திருமதி. L. மகாலட்சுமி, எண்.8, மெஜெஸ்டிக் காலனி, சரோஜினி தெரு, வளசரவாக்கம், சென்னை - 600 087.
(2) திரு. A. டேவிட்சன் ஜூனரின், (PAN எண் AADPH9474Q), த/பெ திரு. அடைக்கலம் நர்மராஜ், எண்.8, மெஜெஸ்டிக் காலனி, சரோஜினி தெரு, வளசரவாக்கம், சென்னை - 600 087.
(3) திருமதி. L. மகாலட்சுமி, (PAN எண் AMSPM5449H), க/பெ திரு. K A ஆனந்தன், எண்.8, மெஜெஸ்டிக் காலனி, சரோஜினி தெரு, வளசரவாக்கம், சென்னை - 600 087.
...பிரதிவாதிகள்

மாற்றுமுறை சேவை மூலம் பிரதிவாதிகள் 1 முதல் 3 ஆகியோருக்கு அழைப்பாணைகள்

ரூ.2,01,39,794.59பை (ரூபாய் இரண்டு கோடியே ஒரு லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று தொன்னூற்று நான்கு மற்றும் பைசா ஐம்பத்து ஒன்பது மட்டும்) தொகையை மீட்பதற்காக இந்த தீர்ப்பாயத்தில் மேற்கூறிய விண்ணப்பம் விண்ணப்பதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அழைப்பாணைகள் சாதாரண முறையில் வழங்க முடியாத நிலையில் மாற்று முறை சேவை மூலம் அவற்றை வழங்குவதற்கு இத்தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளதை அடுத்து இந்த பத்திரிக்கை பிரசுரம் மூலம் அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

எனவே நீங்கள் இந்த தீர்ப்பாயத்தின் முன்னிலையில் நேரிடையாக அல்லது முறையாக அறிவுறுத்தப்பட்ட வழக்கறிஞர் மூலமாக **31.07.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு** ஆஜராகி மேல்முறையீட்டில் கோரப்பட்டிருக்கும் நிவாரணத்தை ஏன் வழங்க கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யத்தவறினால், நீங்கள் இல்லாத நிலையிலும் விண்ணப்பம் விசாரிக்கப்பட்டு சட்டப்படி முடிவு செய்யப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

27 மே, 2026 அன்று எனது கையொப்பத்துடன் தீர்ப்பாயத்தின் முத்திரையிடப்பட்டது.

பதிவாளர்

ரூ.200 கோடி பணமுறைகேடு வழக்கு

சுகேஷ், ஜாக்குலின் உள்பட 17 பேர் மீதான குற்றச்சாட்டுகளை பதிவு செய்தது நீதிமன்றம்

புது தில்லி, ஜூன் 3: ரூ.200 கோடி பணமுறைகேடு வழக்கில் தீவிர மோசடியாளராக குற்றஞ்சாட்டப்படும் சுகேஷ் சந்திரசேகர், நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸ் உள்பட 17 பேர் மீதான குற்றச்சாட்டுகள், தில்லி நீதிமன்றத்தால் புதன்கிழமை முறைப்படி பதிவு செய்யப்பட்டன.

மகாராஷ்டிர மாநில திட்டமிடப்பட்ட குற்றங்கள் தடுப்புச் சட்டத்தின் (எம்சிஓசிஏ) கடுமையான பிரிவுகள் உள்பட பல்வேறு பிரிவுகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட மற்றொரு வழக்கிலும் சுகேஷ் உள்பட 21 பேர் மீதான குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

இரட்டை இலை சின்னம் வழக்கில் தேர்தல் ஆணையத்திடம் இருந்து சாதகமான முடிவைப் பெற்று தருவதாகக் கூறி, டிடிவி தினகரனிடம் இருந்து லஞ்சம் வாங்கியதாக சுகேஷ் சந்திரசேகர் 2017-இல் தில்லி காவல் துறையால் கைது செய்யப்பட்டார்.

பின்னர், சிறையில் இருந்தபடியே குற்றவியல் கும்பலை இயக்கிய அவர், பிரதமர் அலுவலகம், உள்துறை அமைச்சகம் மற்றும் சட்ட அமைச்சக அதிகாரிகள் உள்பட மூத்த அரசு அதிகாரிகளைப் போல் ஆள்மாறாட்டம் செய்து, பல்வேறு குற்றச் செயல்களை அரங்கேற்றியதாகக் கூறப்படுகிறது.

மிரட்டிப் பணம் பறித்தல், மோசடி, ஆள்மாறாட்டம் மற்றும் குற்றவியல் அச்சுறுத்தல் ஆகிய குற்றங்களின் மூலம் ரூ. 200 கோடிக்கும் அதிகமான வருமானத்தை இவர் ஈட்டியுள்ளதாக அமலாக்க இயக்குநரகம் தெரிவித்தது.

இது தொடர்பாக பணமுறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில், சுகேஷ், அவரது மனைவி லீனா மரியா பால், நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸ் உள்பட 17 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. போதிய முகாந்திரம் உள்ளதால், அனைவர் மீதான குற்றச்சாட்டுகளையும் முறைப்படி பதிவு செய்வதற்கான உத்தரவை தில்லி கூடுதல் அமர்வு நீதிமன்றம் சில தினங்களுக்கு முன் பிறப்பித்தது.

அதன்படி, சுகேஷ், ஜாக்குலின் உள்ளிட்டோர் மீதான குற்றச்சாட்டுகள் புதன்கிழமை முறைப்படி பதிவு செய்யப்பட்டன.

இதேபோல், மகாராஷ்டிர திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புச் சட்டம், தகவல் தொழில்நுட்பச் சட்டம் உள்ளிட்ட சட்டப் பிரிவுகளின்கீழ் சுகேஷ் உள்பட 21 பேர் மீதான வழக்கிலும் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. இரு வழக்குகளிலும் இனி நீதிமன்றத்தில் தீவிர விசாரணை நடைபெறும்.

பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
BAJAJ HOUSING FINANCE

**பெருநிறுவன அலுவலகம்: செரிப்ரம் IT பார்க், B2 கட்டிடம், 5